செ.வெ.எண்:92/செப்டம்பர் 2018 நாள்:27.09.2018

**திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஒருங்கிணைந்த குழந்தை பாதுகாப்பு திட்டத்தின் பணியாளர் தேர்விற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.இராசாமணி.இ.ஆ,ப., அவர்கள் தகவல்.**

--------------

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ஒருங்கிணைந்த குழந்தை பாதுகாப்பு திட்டத்தின் பணியாளர் தேர்விற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.இராசாமணி.இ.ஆ,ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் திருச்சிராப்பள்ளி மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்ற கீழ்கண்ட பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

ஒரு சமூகப்பணியாளர் பணியிடத்திற்கான தொகுப்பூதியம் -ரூ.14000/-(ஒரு மாதத்திற்கு) ஆகும். மேலும் இளங்கலை பட்டதாரி/முதநிலை பட்டதாரி(10+2+3 மாதிரி) உளவியல், சமூகப்பணி, சமூகவியல், வழிகாட்டுதல், மற்றும் ஆற்றுப்படுத்துதல் துறைகளில் பட்டம் பெற்றிருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். 40 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் கூடாது.

மேற்கண்ட பதவிகளுக்கான விண்ணப்பப்படிவத்தினை https://tiruchirappalli.nic.in/ என்ற இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை 10.10.2018 அன்று மாலை 5.30 மணிக்குள் மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலவலர், மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகு, எண்:1,ரேஸ்கோர்ஸ் ரோடு, காஜாமலை, திருச்சிராப்பள்ளி-23. என்ற முகவரிக்கு வந்து சேரும் வகையில் அனுப்பப்பட வேண்டும். மேலும் விவரங்களுக்கு 0431-2421055 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு விவரங்களை தெரிந்து கொள்ளலாம். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.இராசாமணி.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு:**

27/9/2018

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி.**